**முத ன்மை ச ார்பு நீதிமன்ற ம், கரூர்**

**முன் னிலை - திரு. டி.வி. மணி, பி. ஏ., எல். எல்.பி.,**

**முத ன்மை ச ார்பு நீதிபதி, கரூர்**

**2016ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29 ம் நாள் வெள்ளிக்கி ழமை**

**அசல் வ ழக்கு எண். 187/2009**

மலர்கொடி ... வாதி

/எதிர்/

1) சக்திவேல்
2) சுசீலா
3) கௌசல்யா
4) அமராவதி
5) சரோஜா (இறப்பு)
6) பெருமாயி அம்மாள் (இறப்பு)
7) சண்முகம்
8) பானுபிரியா
9) ஜவஹர், ... பிரதிவாதிகள்

(இடைமனு எண்.329/2012 நாள் 29.08.2012 அனுமதிக்கப்பட்டதன் வாயிலாக 7, 8 மற்றும் 9 பிரதிவாதிகள் பிராதில் சேர்க்கப்பட்டது)

இவ்வழக்கு 21.01.2016ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.குணசேகர் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 மற்றும் 7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், 7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையை தாக்கல் செய்யாமலும், 07.11.2014ம் தேதியில் நீதிமன்றத்தில் அழைத்தும் தோன்றவில்லை என்பதால் அவர்களை ஒருதரப்பினராக்கப்பட்டும், வழக்கு விசாரணையின்போது வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்துகொள்ள 16.12.2015, 21.12.2015, 06.01.2016, 12.01.2016 மற்றும் 21.01.2016க்கு ஒத்திவைக்கப்பட்டும், 21.01.2016ம் தேதியில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் அவர்களால் தனக்கு எவ்வித தகவலும் இல்லை என எடுத்துரைக்கப்பட்டும், 1 முதல் 4 பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் அவர்களை ஒரு தரப்பினராக்கப்பட்டும், வழக்குரை, எதிர்வழக்குரை, வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்தும், இதுநாள் வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்தும், இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

பாகப்பிரிவினை, தனிசுவாதீனம் மற்றும் செலவுத் தொகையும் கோரி வாதியால் Under Order VII Rule 1 of Code of Civil Procedureன்படி தாக்கல் செய்யப்பட்ட தாவா.

**(1)வழக்கு உரையின் சுருக்கம்.**

தாவாச் சொத்துக்கள் வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றும், வாதியின் தந்தையான பாலமுத்துகவுண்டர் மகன் வேலுச்சாமிக்கும், தாயாரான இவ்வழக்கின் 6ம் பிரதிவாதியான இறந்துபோன பெருமாயி அம்மாள் என்பவருக்கும் சுமார் 60 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது என்றும், மேற்படி திருமணம் நடைபெற்ற அன்றே அதே இடத்தில் பத்து நிமிடம் கழித்து பாப்பாயி என்பவரை திருமணம் செய்துகொண்டார் என்றும், திருமணத்திற்கு பின்னிட்டு வாதியின் தந்தை வேலுச்சாமி, தாயார் பெருமாயி அம்மாள் மற்றும் பாப்பாயி ஆகியோர் கூட்டுக்குடும்பம் நடத்தி கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தனர் என்றும், மேற்படி குடும்பம் நடத்தியதில் 6ம் பிரதிவாதிக்கும் வேலுச்சாமிக்கும் மகளாக வாதி பிறந்தார் என்றும், இவ்வழக்கின் 1 முதல் 5 பிரதிவாதிகள் மேற்படி எனது தந்தை வேலுச்சாமியின் 2வது மனைவியாகிய பாப்பாயி என்பவரின் மகன் மற்றும் மகள்கள் என்றும், வாதியின் தந்தை வேலுச்சாமி கடந்த 21.04.2002ம் தேதி அவரது வாரிசுகளாக வாதியையும் இவ்வழக்கின் 1 முதல் 6 பிரதிவாதிகளையும் விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், வாதிக்கு கடந்த 27.05.1996ம் தேதியன்று திருமணம் நடைபெற்றது என்றும், இவ்வழக்கின் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு இந்து வாரிசுரிமை சட்டம் 1990 (தமிழ்நாடு திருத்தல் சட்டம்) 1ன்படி 1990க்கு முன்பே திருமணம் நடைபெற்றது என்றும், எனவே வாதிக்கு தாவாச் சொத்துக்களில் 8/21 பங்கினையும், 1ம் பிரதிவாதி 8/21 பங்கும் மற்றும் 6, 2 முதல் 5 பிரதிவாதிகள் 1/21 பங்கினையும் பெறத்தக்கவர்கள் என்றும், 1ம் பிரதிவாதி வேண்டும் என்றே தாவாச் சொத்துக்களில் வாதிக்கு குறைந்தளவு பங்கு மட்டுமே உள்ளது என்றும், தாவாச் சொத்துக்களில் வாதியின் சட்டப்படியான பங்கினை தரஇயலாது என்று கூறிவந்தார் என்றும், ஆகையால் வாதி இனிமேலும் தாவாச் சொத்துக்களை பிரதிவாதிகளுடன் ஒருபோதும் கூட்டாக அனுபவிக்க இயலாது என்பதால் கடந்த 11.08.2006ம் தேதி வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றும், மேலும் வாதியின் தந்தை வேலுச்சாமி உயிருடன் இருக்கும்போதே வாதியின் குடும்பச் சொத்தில் ஒரு குறிப்பிட்ட சொத்தை மற்ற கூட்டு பங்குதாரர்களுடன் சேர்ந்து ஒரு "மணி ஒமேகா கிரானைட் பிரைவேட் லிமிடெட்" என்ற நிறுவனத்திற்கு 29.02.2000ம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் விற்கப்பட்டது என்றும், மேற்படி கிரையப் பத்திரத்தில் வாதியும் 1ம் பிரதிவாதியும் மற்றும் வாதியின் தந்தை இறந்துபோன வேலுச்சாமியும் சேர்ந்து கையொப்பம் செய்து விற்றுள்ளார்கள் என்றும், மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்போது 5ம் பிரதிவாதி கடந்த 27.08.2010ம் தேதி இவ்வழக்கின் 7 முதல் 9 பிரதிவாதிகளை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், அதேபோல் மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்

பொழுதே 6ம் பிரதிவாதியான வாதியின் தாயார் கடந்த 16.05.2013ம் தேதியன்று வாரிசாக வாதியை மட்டும் விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், மேலும் 6ம் பிரதிவாதியாகிய வாதியின் தாயார் இறந்துவிட்டபடியால் தாவாச் சொத்துக்களில் அவருக்குரிய 1/21 பங்கினையும் அவரது ஒரே வாரிசான வாதி சட்டப்படி பெற உரிமையுள்ளது என்றும், எனவே வாதிக்கு தாவாச் சொத்துக்களில் இறந்துபோன 6ம் பிரதிவாதியின் பங்கையும் சேர்த்து 9/21 பங்கினை பெற உரிமையுள்ளது என்றும், எனவே வாதி பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று கோரியுள்ளார்.

<u>**(2) 1ம் எதிர்வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையினை 2 முதல் 5 எதிர்வாதிகள் தரப்பில் தமதாக ஏற்றுக்கொண்டு தாக்கல் செய்ததின் சுருக்கம்.**</u>

1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை 2 முதல் 5 எதிர்வாதிகளால் தமதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த அசல் வழக்கானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர, இதர சங்கதிகளை வாதியே நிரூபணம் செய்யவேண்டும். தாவாச் சொத்துக்கள் வாதியின் தந்தை இறந்துபோன வேலுச்சாமி மற்றும் 1ம் பிரதிவாதியின் கூட்டு சொத்துக்கள் என்றும், வாதிக்கு தாவாச் சொத்துக்களில் 8/21 பங்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், 5ம் பிரதிவாதி சரோஜாவுக்கு 1991ஆண்டுக்கு முன்பே திருமணம் நடைபெற்றது என்றாலும், மேற்படி சரோஜாவும் 29.02.2000ம் தேதியில் "மணி ஒமேகா கிரானைட்ஸ் பிரைவேட் லிமிடெட்" என்ற நிறுவனத்திற்கு விற்ற கிரையப் பத்திரத்தில் ஒரு பங்குதாரர் என்றும், தாவாச் சொத்துக்களில் அவரும் ஒரு கூட்டு பங்குதாரர் என்றும், மேலும் மேற்படி "மணி ஒமேகா கிரானைட்ஸ் பிரைவேட் லிமிடெட்" என்ற நிறுவனம் இவ்வழக்கில் அவசியமான தரப்பினர் என்றும், மேற்படி நிறுவனத்தினை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு அவசியமான தரப்பினரை சேர்க்காத தோஷத்திற்கு உள்ளாகியுள்ளது என்றும், வாதியின் தந்தை இறந்துபோன வேலுச்சாமி வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ளதுபோல் வாதியின் தாயார் 6ம் பிரதிவாதியை முதலில் திருமணம் செய்யவில்லை என்றும், 1 முதல் 5 பிரதிவாதிகளின் தாயாரா பாப்பாயி அம்மாள் என்பவரையே இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு 62 ஆண்டுகளுக்கு முன்பே திருமணம் செய்துகொண்டார் என்றும், அவர்களது திருமணமே இந்து திருமணச் சட்டம் 1956ன்படி நிலையானது என்றும், வாதியின் தாயார் 6ம் பிரதிவாதிக்கும் தந்தை வேலுச்சாமிக்கும் இடையே நடைபெற்ற திருமணம் முறையற்ற திருமணம் என்றும், அது ஏற்புடையதல்ல என்றும், வாதியானவர் இறந்துபோன வேலுச்சாமியின் சட்டப்படியான வாரிசு அல்ல என்றும், இறந்துபோன வேலுச்சாமியின் சொத்துக்களில் வாதிக்கும் அவரது தாயார் 6ம் பிரதிவாதிக்கும் கூட்டுப்பங்கு கிடையாது என்றும், 1ம் பிரதிவாதி மற்றும் 5ம் பிரதிவாதி

ஆகியோர் மட்டுமே வேலுச்சாமியின் சொத்துக்களில் கூட்டுப்பங்கு உரிமையாளர் என்றும், வாதிக்கும் வாதியின் தாயார் 6ம் பிரதிவாதிக்கும் இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956ன்படி தாவா சொத்துக்கள் தனித்து கிடைக்காது என்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளை உள்ளடக்கியே கிடைக்கத்தக்கதென்றும், வேலுச்சாமி திருமணத்திற்கு பின்னிட்டு வாதியின் தாயார் 6ம் பிரதிவாதி பெருமாயிஅம்மாள் மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் தாயார் பாப்பாயி ஆகியோர் ஒன்றாக வசிக்கவில்லை என்றும், தனித்தனியே வசித்தனர் என்றும், வேலுச்சாமி இறந்த பின்னிட்டு அவரது சொத்துக்களில் 6ம் பிரதிவாதி வாதியின் தாயாருக்கும் வாதிக்கும் 1/3 பங்கு உரிமையே தாவா சொத்துக்கள் மற்றும் "மணி ஒமேகா கிரானைட்ஸ் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்திற்கு விற்ற சொத்துக்களில் உள்ளது என்றும், 1 முதல் 5 பிரதிவாதிகளின் தாயார் பாப்பாயி அம்மாள் இறந்ததற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான 1 முதல் 5 பிரதிவாதிகளே அவரது பங்கிற்கும் சேர்த்து உரிமையாளர்கள் என்றும், வாதிக்கும் வாதியின் தாயார் இறந்துபோ 6ம் பிரதிவாதிக்கும் இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956ன்படி (தமிழ்நாடு திருத்தச் சட்டம் 1/1990 மறறும் இந்து வாரிசுரிமைச் சட்டம் 39/2005)ன் கீழ் முழுகூட்டுப்பங்கு உரிமையாளர்கள் அல்ல என்றும் வாதிக்கும் வாதியின் தாயாருக்கும் சேர்த்து 10/120 பங்கு மட்டுமே தாவாச் சொத்துக்களில் கிடைக்கத்தக்கது என்றும், கடந்த 11.08.2006ம் தேதியிட்ட சட்ட அறிவிப்பானது பொய் என்றும், 29.02.2000ம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தில் ஒரு சில காரணங்களால் வாதி கையொப்பம் செய்துள்ளார் என்றும், வாதி மேற்படி கிரையப் பத்திரத்தை இறந்துபோன வேலுச்சாமி மற்றும் 1ம் பிரதிவாதி மற்றும் 5ம் பிரதிவாதி ஆகியோர்களுடன் சேர்ந்து ஒரு கூட்டுப் பங்குதாரர் என்ற முறையில் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், மேற்படி கிரையப் பத்திரத்தில் வாதி செய்த கையொப்பமானது மோசடி என்றும் அதனால் வாதிக்கு வாதியின் தந்தை வேலுச்சாமிகவுண்டரின் சொத்துக்களில் கூட்டு உரிமையோ, அனுபவமோ மற்றும் கூட்டுப்பங்கோ இல்லை என்றும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு உரிய பங்கினை தவிர்த்து தாவாச் சொத்துக்களில் வாதிக்கு 5/120 பங்கும் வாதியின் தாயார் இறந்துபோன 6ம் பிரதிவாதி பெருமாயி அம்மாளுக்கு 5/120 பங்கு மட்டுமே கிடைக்கத்தக்கது என்றும், இவ்வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு 110/120 பங்குகள் கிடைக்கத்தக்கதென்றும், அதனால் அதற்குரிய நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியுள்ளார்கள் என்றும் எதிர் வழக்குரை தாக்கல் ஆயிற்று.

(3) வழக்குரை எதிர்வழக்குரை ஆகியவைகளை ஆராய்ந்து வழக்கின் முடிவுக்காக கீழ்க்கண்ட எழுவினாக்கள் மற்றும் கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்டன.

1. Whether the plaintiff is having 8/21 shares in the suit properties?
2. Whether the plaintiff is entitled to get preliminary decree the for partition as prayed for?

3. Whether the defendants 1 to 5 are entitled to 110/120 shares as content in the written statement?

4. To what other relief?

**கூடுதல் எழுவினாக்கள்**

1) வாதிக்கு வழக்கில் கோரியபடி 9/21 பாகம் பெற உரிமை உடையவரா?

2) வாதிக்கு வழக்கில் கோரியபடி 9/21 பாகம் கிடைக்கக்கூடியதா?

இவ்வழக்கின் விசாரணையின்போது வாதியானவரை வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்வாதி தரப்பில் வாய்மொழி சாட்சியமோ சான்றாவணமோ முன்னிலைப் படுத்தவில்லை.

**(4) எழுவினாக்கள் 1 முதல் 4 மற்றும் கூடுதல் எழுவினாக்கள் 1 மற்றும் 2**

இந்த வழக்கின் வாதியானவர் எதிர்வாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை, தனிசுவாதீனம் மற்றும் வழக்கின் செலவுத் தொகையையும் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகும். இந்த வழக்கிற்கு எதிர்வாதி தமது வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி மேற்காணும் வகையில் எதிர் வழக்குரையை தாக்கல் செய்தும், தீர்வுக்காக மேற்காணும் வகையில் எழுவினாக்கள் வனையப்பட்டது. இந்த வழக்கானதை கடந்த 10.12.2015ம் தேதியில் வாதியானவரை வா.சா.1ஆக முதல் விசாரணை செய்யப்பட்டும், அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. அவரை குறுக்கு விசாரணை செய்துகொள்ள 16.12.2015, 21.12.2015, 06.01.2016, 12.01.2016 மற்றும் 21.01.2016க்கு ஒத்திவைக்கப்பட்டது. 21.01.2016ம் தேதியில் வாதியானவர் ஆஜராகி இருந்தும் எதிர்வாதிகள் தரப்பில் வாதியை குறுக்கு விசாரணை செய்ய முன்வராத நிலையில் எதிர்வாதிகள் தரப்பு வழக்கறிஞர் அவர்களால் தனக்கு எவ்வித தகவலும் இல்லை என எடுத்துரைக்கப்பட்டதாலும், அன்றைய தேதியில் எதிர்வாதிகளை அழைத்தும் ஆஜரில்லை என்பதால் அவர்களை ஒருதரப்பினராக்கப்பட்டது. அன்றைய தேதியிலேயே வாதியின் சாட்சியமும் முடிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

இவ்வழக்கின் வாதியானவர் தாக்கல் செய்துள்ள வழக்குரைக்கு எதிர்வாதிகள் தாவா சங்கதிகள் அனைத்தையும் முற்றிலுமாக மறுத்துரைத்த பொழுது, வாதியானவர் நீதிமன்றத்தில் ஆஜராகி, சாட்சியம் அளித்தும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்களை குறியீடு செய்து கொண்டபொழுது, அவரை குறுக்கு விசாரணை செய்ய எதிர்வாதியானவர்கள் முன்வரவில்லை என்பதில் இருந்தும், வாதி தரப்பு சங்கதிகள் ஏற்கக்கூடியதாகவே இருந்து வருகிறது. இந்த வழக்கின் தன்மையையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுதும், வழக்கின் பரிகாரத்தையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுதும், வாதியானவர்

தனக்குரிய பங்கு பாகத்தை கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளதும் உண்மையாகவே இருந்து வருகின்றது. எனவே எதிர்வாதிகள் தரப்பிலும் எதிர் வழக்குரையை தாக்கல் செய்து இருப்பினும், மேற்காணும் சங்கதிகளை எடுத்துரைப்பதற்கு எதிர்வாதியானவர்கள் வாதியை குறுக்கு விசாரணை செய்துகொள்ள முன்வராத நிலையில், வழக்கிற்கு வாதிக்கு வழக்கு மூலம் உள்ளது என்றும் தீர்மானித்தும், வாதிக்கு வழக்கில் கோரிய பரிகாரம் கிடைக்கக் கூடியதாக உள்ளது என்றும் அதுதவிர வாதிக்கு செலவுத் தொகையும் கிடைக்கக் கூடியதாக உள்ளது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்தும் எழுவினாக்கள் 1 முதல் 4 மற்றும் கூடுதல் எழுவினாக்கள் 1 மற்றும் 2க்கு மேற்கண்டவாறு விடை காணப்படுகின்றது.

**முடிவில் எதிர்வாதிகள் தாவா சொத்தை மண்ணின் தரத்திற்கேற்றவாறு நலந்திகெடு கண்டு 21 சமபாகங்களாகப் பிரித்து அதில் வாதிக்கு 9/21 பாகத்திற்கு தனி சுவாதீனம் கொடுக்க முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்து, செலவுத் தொகையுடன் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இந்த தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் சரிபார்க்கப்பட்டு இன்று 2016ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29ம் நாள் அவையறியப் பகரப்பட்ட தீர்ப்புரையாகும்.

**முதன்மை சார்பு நீதிபதி,**
**கரூர்.**

**<u>வாதி தரப்பு சாட்சியம்</u>**

வா.சா.1 - மலர்கொடி

**<u>வாதி தரப்பு சான்று ஆவணங்களின் பட்டியல்</u>**

வா.சா.ஆ.1 - 21.04.2002 வாதியின் தந்தை வேலுச்சாமியின் இறப்புச் சான்றிதழ் புகைப்பட நகல்

வா.சா.ஆ.2 - 27.05.1996 வாதியின் திருமண அழைப்பிதழ் அசல்

வா.சா.ஆ.3 - 11.08.2006 சட்ட அறிவிப்பு அலுவலக நகல்

வா.சா.ஆ.4 - 29.02.2000 கிரைய பத்திரம் சான்று நகல்

வா.சா.ஆ.5 - கிஸ்து ரசீது புகைப்பட நகல்

வா.சா.ஆ.6 - கிஸ்து ரசீது புகைப்பட நகல்

வா.சா.ஆ.7 - கிஸ்து ரசீது புகைப்பட நகல்

**முதன்மை சார்பு நீதிபதி,**
**கரூர்.**